இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 13.03.2026

# கெட்ட போரை உடனடியாக நிறுத்துங்கள்!

ஈரான் நாட்டின் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் தொடங்கிய போரானது, ஒட்டுமொத்த உலகத்தையும் பாதிப்புக்கு உள்ளாக்கி வருகிறது. இது மூன்று நாடுகளின் போராக முடியப்போவது இல்லை. உலகம் பாதிக்கும் முழுமையான போராகவே பரவி வருகிறது.

**ஈரான் நாட்டில் 175க்கும் மேற்பட்ட பெண் குழந்தைகள், சிறுமிகளின் உடல்கள் வரிசையாகக் கிடத்தப்பட்டிருக்கும் கோரக் காட்சியானது, போர் கொடூரத்தின் அடையாளமாகச் சொல்லத் தக்கது ஆகும்.**

ஈரான் அணு ஆயுதத் தயாரிப்பை நிறுத்த வேண்டும், அணு ஆயுதம் தயாரிக்கத் தேவையான யுரேனியத்தைச் செறிவூட்டுவதை நிறுத்த வேண்டும், நீண்ட தொலைவு சென்று தாக்கும் ஏவுகணைத் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று அமெரிக்கா தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறது. இதை ஈரான் கேட்கவில்லை என்று சொல்லி அந்த நாட்டின் மீது அமெரிக்காவும், இஸ்ரேலும் போர் தொடுத்துவிட்டன.

ஈரான் தலைமை குரு அயதுல்லா அலி கமேனி இத்தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார். 86 வயதான இவர் தான் ஈரான் நாட்டின் உச்சத் தலைவர் ஆவார். அவருடன் அவர் மகள், மருமகன், மருமகள் ஆகியோரும் இறந்து போயிருக்கிறார்கள். இவர் கொல்லப்பட்டுள்ளது ஈரானை அதிகப்படியான கோபத்துக்குத் தள்ளி இருக்கிறது. ஈரான் பாதுகாப்புக் கவுன்சில் கூட்டத்தைக் குறி வைத்து அமெரிக்கா தாக்குதல் நடத்தியதால் முக்கியத் தளபதிகள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இதற்கான பதில் தாக்குதலை ஈரானும் தொடங்கி இருக்கிறது. வடக்கு இஸ்ரேல் பகுதிகள் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியது. பஹ்ரைனில் உள்ள அமெரிக்க கடற்படைத் தலைமையகம் தாக்கப்பட்டுள்ளது. குவைத்தில் உள்ள அமெரிக்க ராணுவ முகாம் மீதும் தாக்குதல் நடந்துள்ளது. வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ முகாம்களை இலக்கு வைத்து தாக்கி வருகிறது ஈரான்.

மேற்காசியாவில் நிலவும் போர் காரணமாக சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பதில் தாக்குதல் நடத்திவரும் ஈரான், மேற்காசியாவில் இருந்து கப்பல்கள் மூலம் கச்சா எண்ணெய், எரிவாயு கொண்டு செல்லப் பயன்படுத்தப்படும் ஹோர்முஸ் நீரிணை கடல் வழித்தடத்தை மூடிவிட்டது.

**இந்தியாவுக்கு முக்கிய வழங்குநர் நாடான கத்தார், தனது திரவ இயற்கை எரிவாயு உற்பத்தியை முழுமையாக நிறுத்திவிட்டது. மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து எண்ணெய் வழங்கல் என்பது கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எனவே எரிவாயு மற்றும் எண்ணெய் தட்டுப்பாடு என்பதை உருவாக்கிவிட்டது இந்தப் போர். உலக அளவில் எரிசக்தித் தட்டுப்பாடு என்பது சர்வதேசப் பொருளாதாரத்தை பெருமளவு பாதித்துள்ளது.**

**இந்தியாவுக்கு பல்வேறு தடைகளை தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறார் அமெரிக்க அதிபர் டிரம்ப். அதில் முக்கியமானது, ரஷ்ய நாட்டில் இருந்து கச்சா எண்ணெய் பெறக் கூடாது என்பது ஆகும். இது, மிகக் கொடூரமான சர்வாதிகார மனோபாவம் ஆகும். ரஷ்ய நாட்டில் இருந்து 30 நாட்களுக்கு மட்டும் கச்சா எண்ணெய் வாங்கிக் கொள்ள இந்தியாவுக்கு அமெரிக்கா அனுமதி வழங்கியது. பின்னர் இந்தத் தடையையும் நீக்க டிரம்ப் பரிசீலனை செய்து வருவதாகச் செய்திகள் வெளியாகி உள்ளது. டிரம்ப் என்ன சொல்வார் என்று வாயைப் பார்த்துக் கொண்டிருக்கும் நிலைமை உருவாகி இருக்கிறது.**

'இந்தப் போர் பலகாலம் நீடிக்கலாம்' என்று சொல்லி வந்த டிரம்ப், 'ஈரான் போர் விரைவில் முடிவுக்கு வரலாம்' என்று சொல்லி இருக்கிறார். 'ஆனால் சர்வதேச கச்சா எண்ணை வழங்கலுக்கு ஈரான் தடை ஏற்படுத்தினால் அந்நாடு மிகக் கடுமையான தாக்குதலைச் சந்திக்க நேரிடும்' என்றும் டிரம்ப் சொல்லி இருக்கிறார். 'பல்லாண்டு காலப் போருக்குத் தயார்' என்று ஈரான் சொல்லி இருக்கிறது. எனவே இப்போர் எப்போது முடியும் எனத் தெரியவில்லை.

'மத்திய கிழக்கில் அமைதியைக் குலைக்கும் இத்தகைய ராணுவ நடவடிக்கைகள், அமெரிக்காவின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குப் பதிலாக பலவீனப்படுத்தும்' என்று 'நியூயார்க் டைம்ஸ்' நாளிதழ் எழுதி இருக்கிறது.

**உலகம் மிகக்கடுமையான நெருக்கடிக்கு ஆளாகி வருகிறது. எரிசக்தித் தட்டுப்பாடும், அதன் மூலமாக பொருளாதாரப் பாதிப்பும், விலைவாசி உயர்வும் ஏற்படும். அரசுகள் இடையே அச்சமான நிலைமை ஏற்படும். மற்ற சிந்தனைகள், வளர்ச்சிகள் பாதிப்பை அடையும். எனவே போரை நிறுத்த அனைத்துவித நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டியது உலக நாடுகளின் கடமை ஆகும். உலக நாடுகள் அனைத்தும் இதில் தலையிட வேண்டும். 'ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சில் ஒற்றுமை இல்லாத அமைப்பாக இருக்கிறது' என்ற தகவல்களும் வருத்தமடையச் செய்கின்றன. 'சர்வதேச ஒழுங்கு தோல்வி அடைந்திருப்பதன் அடையாளம்தான் இந்தப் போர் ' என்று கனடா அறிவித்துள்ளது.**

'சமரசம் செய்யத் தயார்' என்று ரஷ்யா அறிவித்துள்ளது. ஆனால், 'நீங்கள் முதலில் ரஷ்யா - உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வாருங்கள்' என்று ரஷ்ய அதிபர் புதினிடம் அமெரிக்க அதிபர் டிரம்ப் சொல்லி இருக்கிறார். இப்படி இடக்கு மடக்கு ஆகி வருகிறது பிரச்சினை.

**இது குறித்து எல்லாம் பிரதமர் மோடி கவலைப்படவில்லை. போரின் கொடூரத்தைக் கண்டிக்கவில்லை. போரை நிறுத்த அறிவுரை சொல்லவில்லை. இந்தியாவில் சிலிண்டர் கொந்தளிப்பு நடந்து வரும் போது அவர் திருச்சிக்கு வந்து பழைய பல்லவியையே பாடிச் சென்றுள்ளார். சிலிண்டர் தட்டுப்பாடு என்பது போரால் ஏற்பட்டது அல்ல என்று பிரதமர் மோடி நம்புவார். அவருக்கு வெளிநாடுகளுக்குச் செல்ல முடியாது என்ற ஒரு வருத்தம்தான் இருக்கும்.**

●●

### உச்சநீதிமன்றத் தீர்ப்பை வரவேற்கிறேன்: ஒன்றிய அரசு சமத்துவ நெறியோடு

# ஓ.பி.சி. பிரிவினருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குத் தீர்வு காண வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, மார்ச் 13

உச்சநீதிமன்றத் தீர்ப்பை வரவேற்று ஓ.பி.சி. பிரிவினருக்கு இழைக்கப்பட்டு வருகிற அநீதிக்கு ஒன்றிய அரசு தீர்வு காண வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சமூக வலைதளப் பதிவில் வலியுறுத்தியுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

**ஓபிசி மக்களின் நீதிக்கான பல்லாண்டுப் போராட்டத்துக்கு மாபெரும் வெற்றி!**

**ஓபிசி கிரீமி லேயர் பிரிவினர் நிர்ணயம் தொடர்பாக மாண்பமை உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை வரவேற்கிறேன்.**

**இத்தீர்ப்பானது,**

**கிரீமி லேயர் நிர்ணயத்தின்போது ஊதிய வருமானத்தையும் தொழில் அல்லது சொத்து மூலமாக ஈட்டும் வருமானத்தையும் ஒரே தட்டில் வைத்துப் பார்க்கக் கூடாது எனக் கூறியுள்ளது**

**ஓபிசி மக்களின் நியாயமான உரிமைகள் கிடைக்காமல் போவதில் இருந்து பாதுகாக்கிறது.**

**குடிமைப் பணித் தேர்வுகளுக்கான தகுதி வரையறை தொடர்பான உயர்நீதிமன்றங்களின் தீர்ப்புகளை உறுதிசெய்துள்ளது.**

**பல்வேறு துறைகளின் வேலைவாய்ப்புகளில் ஓபிசி மக்களுக்கு எதிராக இருந்த பாகுபாட்டை நிராகரித்திருக்கிறது.**

**இட ஒதுக்கீடு என்பதே சமூகநீதியாகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கானது எனும் நோக்கத்தை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது.**

**எனினும், இந்த வழக்கில் உண்மையாகவே பிற்படுத்தப்பட்ட ஓபிசி பிரிவினர் பலரின் நியாயமான உரிமையை மறுக்கும் நிலைப்பாட்டை NDA அரசு எடுத்து வாதாடியது. அது மட்டுமில்லாமல், முன்னேறிய வகுப்பினருக்கான பொருளாதார ரீதியான EWS இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்து, இட ஒதுக்கீட்டுக்கான அடிப்படையாக அரசியலமைப்புச் சட்டம் வகுத்துத் தந்த வரையறையை மீறியது.**

**மண்டல் குழு அடிப்படையிலான இட ஒதுக்கீடு அமலுக்கு வந்து முப்பது ஆண்டுகளாகியும், நாட்டின் பல முன்னணி உயர்கல்வி நிறுவனங்களிலும் ஒன்றிய அரசுப் பணிகளிலும் பல ஓபிசி பணியிடங்கள் இன்றும் நிரப்பப்படாமலே உள்ளன.**

**மருத்துவப் படிப்புகளுக்கான அகில இந்தியத் தொகுப்பில் 27% ஓபிசி இட ஒதுக்கீட்டை உறுதிசெய்தது உள்ளிட்ட பலவற்றிலும் தி.மு.கழகம் சமூகநீதிக்காகத் தொடர்ச்சியாகப் போராடி வருகிறது. சமூகநீதிக்கான நம் போராட்டம் தொடரும்!**

**ஏற்கெனவே குடிமைப் பணித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றும் தங்களுக்கான இடங்கள் மறுக்கப்பட்ட ஓபிசி தேர்வாளர்களுக்கு ஒன்றிய அரசு கூடுதல் பணியிடங்களை உருவாக்கி, அரசியலமைப்பின் சமத்துவநெறியோடு செயல்பட்டு, அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குத் தீர்வு காண வேண்டும் எனவும் வலியுறுத்துகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாக

# 250 சிறப்பு மருத்துவர்கள் தேர்வு!

## பணி நியமன ஆணைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, மார்ச் 13 -**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 11.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாக மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவ துறையில் (Obstetrics & Gynaecology) 182 சிறப்பு மருத்துவர்களும், கதிரியக்கவியல் (Radiology) துறையில் 37 சிறப்பு மருத்துவர்களும், தடயவியல் மருத்துவத் துறையில் (Forensic Medicine) 24 சிறப்பு மருத்துவர்களும், முதியோர் மருத்துவத் துறையில் (Geriatrics) 6 சிறப்பு மருத்துவர்களும், இருதய அறுவை சிகிச்சை துறையில் (Cardio Thoracic Surgery) 1 சிறப்பு மருத்துவரும், என மொத்தம் 250 சிறப்பு மருத்துவர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.**

தமிழ்நாட்டு மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் கிடைத்திட, புதிய அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களை கட்டுதல், மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், நவீன மருத்துவக் கருவிகளை நிறுவுதல், காலிப் பணியிடங்களை நிரப்புதல், தமிழ்நாட்டில் உள்ள அனைவருக்கும் குறிப்பாக ஏழை எளிய மக்கள் நலவாழ்வு பெறவேண்டும் என்கிற உயரிய நோக்கில் அவர்களின் இல்லங்களுக்கே சென்று மருத்துவச் சிகிச்சை அளித்திடும் "மக்களைத் தேடி மருத்துவம்", சாலை விபத்துக்களில் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில் "இன்னுயிர் காப்போம்நம்மைக் காக்கும்48", சிறப்பு மருத்துவ சேவைகளை மக்கள் குடியிருக்கும் பகுதிகளுக்கே கொண்டு செல்லும் "நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாம்கள் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி, மருத்துவத் துறையில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்கி வருகிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற இந்த ஐந்து ஆண்டு காலத்தில் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக 4,977 உதவி மருத்துவர்கள், 27 மாற்றுத்திறனாளி செவிலியர்கள், 1,011 மருந்தாளுநர்கள் மற்றும் உணவு பாதுகாப்பு அலுவலர், சுகாதார ஆய்வாளர்கள், மருத்துவ உதவியாளர்கள், உள்ளிட்ட இதர மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் என மொத்தம் 12,177 பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் 36 மருத்துவக் கல்லூரிகள், 37 மாவட்ட அரசு மருத்துவமனைகள் மற்றும் 262 அரசு தாலுக்கா மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் சிறப்பு மருத்துவர்களை நியமிக்கும் பொருட்டு தமிழ்நாடு மருத்துவப் பணியாளர்கள் தேர்வு வாரியம் மூலமாக தேர்வு நடத்தப்பட்டு, மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவ துறையில் (Obstetrics & Gynaecology) 182 சிறப்பு மருத்துவர் பணியிடங்களுக்கும், கதிரியக்கவியல் (Radiology) துறையில் 37 சிறப்பு மருத்துவர் பணியிடங்களுக்கும், தடயவியல் மருத்துவத் துறையில் (Forensic Medicine) 24 சிறப்பு மருத்துவர் பணியிடங்களுக்கும், முதியோர் மருத்துவ துறையில் (Geriatrics) 6 சிறப்பு மருத்துவர் பணியிடங்களுக்கும், இருதய அறுவை சிகிச்சை துறையில் (CardioThoracic Surgery) ஒரு சிறப்பு மருத்துவர் பணியிடத்திற்கும், என மொத்தம் 250 சிறப்பு மருத்துவர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், மருத்துவப் பணியாளர்கள் தேர்வு வாரியத் தலைவர் திருமதி உமா மகேஸ்வரி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு இயக்குநர் மருத்துவர் அ.சோமசுந்தரம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அண்ணாநகர் மண்டலத்தில் ரூ.2.44 கோடியில் முடிவுற்ற திட்டப்பணிள் திறப்பு!

# ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்!




*சென்னை,மார்ச்.13-*

*முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி நேற்று (12.03.2026) இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு அவர்கள், வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அண்ணாநகர் மண்டலத்தில் ரூ.2.44 கோடி மதிப்பீட்டில் பல்நோக்கு மையக் கட்டடம் மற்றும் முதல்வர் படைப்பகம் ஆகியவற்றினை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் பல் நோக்கு மையக் கட்டடத்திற்கான பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.*

*இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், அண்ணாநகர் மண்டலம், வார்டு104, வசந்தம் காலனி, 3ஆவது தெருவில் வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் 104ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.1.36 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு மையக் கட்டடத்தில் உள்ள சமுதாயக் கூடம் மற்றும் ஐ பிளாக் 5ஆவது தெருவில் மாநகராட்சி மூலதன நிதியில் ரூ.1.08 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட முதல்வர் படைப்பகம் ஆகியவற்றைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.*

*இதனைத் தொடர்ந்து, திருமூலர் காலனி, விவேகானந்தர் தெருவில் 104ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் பல்நோக்கு மையக் கட்டடத்திற்கான பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.*

*இந்நிகழ்ச்சிகளில், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர் கூ.பி. ஜெயின், மாமன்ற உறுப்பினர்கள் டி.வி. செம்மொழி, திருமதி சுதா தீனதயாளன், மண்டல அலுவலர் த.இனியன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*



கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 73–வது பிறந்தநாளை முன்னிட்டு ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில் முகலிவாக்கத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கழக மருத்துவ அணிச் செயலாளர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் உரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். அருகில் மண்டல குழுத் தலைவர் என்.சந்திரன், ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப.குணாளன், தொகுதி தேர்தல் பார்வையாளர் பத்மபிரியா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், இரா.பாஸ்கரன், கே.எத்திராஜ், மாமன்ற உறுப்பினர் ஜெ.செல்வேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.